


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 274

வியாழக்கிழமை
28 ஓகஸ்ட் 2025

ஆவணி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## நீதிக்கான போராட்டத்தில் தமிழர் தேசமாக திரள்வோம்

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 28**

**சர்வதேச நீதி கோரிய மாபெரும் போராட்டத்தில் வடக்கு - கிழக்கில் இருந்து தமிழர் தேசமாக அனைவரும் அணி திரளவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.** 11

## செம்மணிப் புதைகுழியை பார்வையிடுவார் அநுரகுமார?



யாழ்ப்பாணம், ஓக.28
செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங்காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழியை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பார்வையிடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. 11

## செம்மணியில் நேற்றும் மூன்று என்புக்கூடுகள்

### இதுவரை 169 என்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஓக.28
செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் 3 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. புதைகுழியில் இருந்து நேற்று 8 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் 11

## காணி விடுவிப்புக்காக அமைச்சு மட்டக்குழு

### அரசாங்கம் ஆலோசனை



கொழும்பு, ஓக. 28
காணி விடுவிப்புத் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு அமைச்சுக்கள் மட்டத்தில் குழுவொன்றை உருவாக்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் 11

உள்ளூராட்சித் தேர்தலில் யாழில் போட்டியிட்ட

## 204 வேட்பாளர்கள்மீது பொலிஸார் விசாரணை!

யாழ்ப்பாணம், ஓக.28
கடந்த உள்ளூராட்சிச் சபையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் 204 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் 11



## குறுகிய அரசியல் நோக்கங்களே எதிரணி இணைவுக்கு காரணம்!

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.28
சட்டம் தனது கடமையை சரிவரச் செய்யும்போது, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே அரசியல் பழிவாங்கல் புராணத்தை எதிரணிகள் ஓதி வருகின்றன. மைத்திரி, மஹிந்த மற்றும் சஜித் தரப்புகள் ஜனநாயகம் பற்றி பேசுவது, சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதாகும். இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபார இணைப்பு அலகும், முயற்சியாண்மைக் கற்கைநெறி மாணவர்களும் இணைந்து நடத்திய உலக முயற்சியாளர் தின விழாவும், மாபெரும் வர்த்தக சந்தையும் பல்கலைக்கழகத்தில் நேற்று 11



## இ.போ.சபை தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

கொழும்பு, ஓக.28
இலங்கை போக்குவரத்து சபையின் தொழிற்சங்கங்கள் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்புப்போராட்டத்தை அறிவித்துள்ளன.
சில தினங்களுக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட நீண்ட தூர பஸ்களுக்கான ஒருங் 11

## ரணில் விடயத்தில் அழுத்தம் இல்லை

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.28
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவகாரத்தில் எவ்வித இராஜதந்திர அழுத்தங்களும் அரசாங்கத்துக்கு பிரயோகிக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச் 11

ரணில் விசாரணையின்போது

## நீதிமன்றுக்கு அருகில் கூடியோருக்கு சிக்கல்

கொழும்பு, ஜூலை 28
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, நீதிமன்ற வளாகத் 11

### முச்சந்தி முரளி

‘ஒவ்வொருத்தரா இனி விசாரணை, கைது எண்டு உள்ள போறதும் வாறதுமா இருக்கப்போயினம் கண்டியளோ’

## கம்மன்பிலவுக்கு எதிராக விரைவில் விசாரணை!

கொழும்பு, ஓக.28
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில ஊடக சந்திப்பொன்றில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது. 11

## கொழும்பு மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளருக்கு ஆப்பு?

கொழும்பு, ஜூலை 28
கொழும்பு, தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லனவுக்கு எதிராகக் ஒழுக்காற்று விசாரணை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று பதில் சுகாதார அமைச்சர் மருத்துவர் ஹங்சக விஜேமுனி நேற்றுத் தெரிவித்துள்ளார்.
மருத்துவமனையில் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4176
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள்
04 20 31 51
விசேட எழுத்து H

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1243
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்
22 34 47 62

**NLB ஜய**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0202
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள்
1 7 4 4

**மெகா பவர்**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2282
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள்
24 33 39 62

**மஹஜன சம்பத**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5934
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள்
7 3 7 8 9 6

**தன நிதானய**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1964
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள்
02 11 47 53
விசேட எழுத்து H

**அத சம்பத**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0509
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள்
7 8 9 6

**சுப தவசக்**
திகதி 27.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0050
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள்
21 34 38 50

# மாகாணசபைத் தேர்தலுக்கு விரைந்து சட்டமியற்றுங்கள்!

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.28**

**மாகாணசபைத் தேர்தலை நடத்துவற்கு உறுதியான மற்றும் நிச்சயிக்கப்பட்ட சட்டமேதும் தற்போது கிடையாது. சட்டமியற்றும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. எனவே மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த அரசாங்கம் நாடாளுமன்றத்தின் ஊடாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அரசஅதிகாரிகள்ஊடாகமாகாண சபைகள் நிர்வகிக்கப்படுகின்றன. இது ஜனநாயகத்துக்குப் பொருத்தமானதாக அமையாது. தேர்தலை நடத்துவதாயின் அதற்குரிய சட்டம் அவசியம். ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் இல்லாமல் தேர்தலை நடத்தும் இயலுமை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குக் கிடையாது. சட்டமியற்றும் அதிகாரம் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. ஆகவே எமது விருப்பத்திலான சட்டத்துக்கு அமைய தேர்தலை நடத்த முடியாது. சட்டவாக்கத் துறையால் இயற்றப்படும் சட்டத்துக்கு அமைவாகவே தேர்தலை நடத்தமுடியும். மாகாணசபைத் தேர்தலை நடத்துவற்கு உறுதியான மற்றும் நிச்சயிக்கப்பட்ட சட்டமேதும் தற்போது கிடையாது. தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசு எடுக்கும் சகல செயற்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 27.08.2025
தினம் புதன்கிழமை
வெற்றி வாரம் 0642
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கம் 1 5 8 4 6 3

**Super Ball**
திகதி 27.08.2025
தினம் புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2908
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 11 58 74 80

**சனிதா**
திகதி 27.08.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 29 42 59 73
வெற்றி வாரம் 5069

**லக்ன ராசி**
திகதி 27.08.2025
தினம் புதன்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம் 19 51 54 60
சீட்டிழுப்பு வாரம் 4620

**KAPRUKA**
திகதி 27.08.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து L
சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கம் 26 33 44 56
வெற்றி வாரம் 2084

**அத கோடிபதி**
திகதி 27.08.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 27 37 46 57
வெற்றி வாரம் 2734

**JAYODA**
திகதி 27.08.2025
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 33 37 53 62
வெற்றி வாரம் 2156

# செம்மணிக்கு நீதிகோரிய போராட்டத்துக்கு ஆதரவு!

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் எதிர்வரும் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளநிலையில் செம்மணிப் போராட்டம் வலுப்பெற அதற்கு ஆதரவு வழங்குவதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இன்பம் அறிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் போராட்டம் வெற்றிபெறவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு

தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஒற்றுமையீனங்கள் மற்றும் குளறுபடிகளால்தான் எந்தவொரு போராட்டமும் முழுமையான இலக்கை அடையாதிருப்பதற்குக் காரணமாக அமைகிறது.

ஒற்றுமையின் பலத்தை ஒரு நிலையில் கொண்டுசேர்க்க இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னரே எமது அமைப்பு ஆதரவை வழங்குகின்றது. அந்தவகையில் நியாயமான போராட்டத்தைப் பொது அமைப்புகளும் மக்களும் இணைந்து வெற்றிபெறச் செய்யவேண்டும் - என்றார். (ச-20)



# இந்த அரசால் எம்.பி.பதவிக்கு அகௌரவம்

கொழும்பு, ஓக.28


இந்த அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுயமரியாதையை அழித்துவிட்டது என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வதற்கு வாகனமில்லை. நாடாளுமன்றுக்குப் பஸ்களில் வருகிறார்கள்.

இருந்த வாகனங்களை விற்றுவிட்டு கப்ரக வாகனங்களை இந்த அரசு கொள்வனவு செய்துள்ளது. அதுவும் அரசின் பாவனைக்கு அல்ல அவர்களின் கட்சியின் பாவனைக்கு.

இந்தஆட்சியாளர்களுக்குமூளை சிறிது. வாய் மட்டும் பெரிது. அதை வைத்தே ஆட்சிக்கு வந்துவிட்டார்கள். இப்போது ஆட்சி நடத்தத்தெரியாமல் தடுமாறுகிறார்கள் - என்றார். (ச-75)

# தேசபந்துவுக்கு பிணை



கொழும்பு, ஓக.28

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பிணையில் செல்ல கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த பின்னர் கொழும்பு கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுர இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அதன்படி, சந்தேகநபரான தேசபந்து தென்னக்கோனை தலா ஒரு மில்லியன் ரூபாய் படி இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்ட நீதிவான், சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கும் தடைவிதித்தார். (ச-இ)

# இருதய சத்திரசிகிச்சை ரணிலுக்கு அவசியம்!

## தேசிய மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உடனடியாக இருதய சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டும் என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷன் பெல்லன தெரிவித்துள்ளார்.

அவரது இதயத்தில் சில சிக்கல்கள் உள்ளன. விரைவில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்துவது நல்லது.



தேசிய மருத்துவமனையில் காத்திருப்புப் பட்டியல் சில நேரங்களில் சுமார் 3 ஆண்டுகளாகும். பிணை வழங்கப்பட்டதால் சத்திரசிகிச்சைக்காக அவர் விரும்பும் மருத்துவமனைக்குச் செல்லலாம் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் மனித எச்ச மீட்புப்பகுதியில்

# 'ஸ்கான்' ஆய்வுக்கு பட்ஜெட் சமர்ப்பிப்பு

**திருகோணமலை, ஓக.28**

**திருகோணமலை சம்பூர்ப் பகுதியில் மேலதிக மனித எச்சங்கள் தொடர்பில் ஸ்கான் இயந்திரம் கொண்டு ஆய்வு செய்வதற்காக சம்பூர் பொலிஸாரினால் மூதூர் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது.**

குறித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்திடம் இருக்கின்ற ஜி.பி.ஆர் என்ற ஸ்கான் இயந்திரத்தைக் கொண்டு மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா என்பதை ஆய்வுசெய்வதற்காக சட்ட மருத்துவ அதிகாரி, தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக காணாமல் போனோர் அலுவலகத்தினால் ஒப்பமிடப்பட்டு குறித்த உத்தேச பட்ஜெட் ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த பட்ஜெட் ஆனது மூதூர் மாவட்ட நீதிமன்றக் கட்டளையுடன் மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டு மாகாண மேல்நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டது.

அதேவேளை சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோரப் பகுதியில் மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி அகற்றுவதற்கான அகழ்வுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடந்த ஜூலை மாதம் குறித்த பகுதியில் இருந்து சிதைந்த மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## கிழங்கு, வெங்காயம் இறக்குமதி வரி உயர்வு

கொழும்பு, ஓக.28

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றுக்கான விசேட பண்டவரி நேற்றுமுன்தினம் முதல் உயர்த்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மீதான விசேட பண்டவரி கிலோவிற்கு 60 ரூபாவிலிருந்து 80 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கான வரி கிலோவுக்கு 10 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (ச-இ)

## பொன். சிவகுமாரனின் ஜனனதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.28

தியாகி பொன். சிவகுமாரனின் 75 ஆவது பிறந்தநாள் நினைவு தினம் உரும்பிராயில் உள்ள அன்னாரின் சிலையடியில் தியாகி பொன். சிவகுமாரன் நினைவேந்தல் குழு உறுப்பினர் எஸ்.செந்தூரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் தேசிய அமைப்பாளர்தோழர்ப.சீவரத்தினம் மற்றும் நினைவேந்தல் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஈழப் போராட்ட வரலாற்றில், சயனைட் அருந்தி உயிர்நீத்த முதல் போராளி இவரே. இதனால் அவர் முதல் தற்கொடையாளர் என அழைக்கப்படுகிறார். (ச-25,20)

## சுற்றுலாவிகள் வருகை உயர்வு

கொழும்பு, ஓக.28

நடப்பாண்டில் இதுவரை 1,53,05,054 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளனர் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த மாதம் இதுவரை ஒரு இலட்சத்து 66,766 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர். அவர்களில் 38,456 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## வேலணைப் பிரதேச செயலக புதிய செயலாளர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஓக.28

வேலணைப் பிரதேச செயலகத்திற்குப் புதிய செயலராக நியமிக்கப்பட்ட தனபாலசிங்கம் அகிலன் நேற்று புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பதவியேற்றார். அவர் அன்றைய தினமே வேலணைப் பிரதேச செயலகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றார். (ச-ஒ-9)




## அனுமார்வால் இழுபாடு

ஏதும் நல்லது நடந்தால் சிலருக்குப் பொறுக்காது. ஏதும் திருகுதாளம் செய்து அதைக் குழப்பினால்தான் அவைக்குப் பத்தியப்படும். அப்பிடிப்பட்ட சிலர் இந்த பதினேழு பிள்ளையளும் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு வாறதை தடுக்க கன இடங்களுக்கு ஓடியாடித் திரிஞ்சு, ஆளுநரிட்டையும் போய் "இப்பிடி ஒருக்காலும் இன்ரர்வியூ வைச்சு சுற்றுநிருபப்படி எங்கட பள்ளிக்கூடத்துக்கு இடையில பிள்ளையளை எடுக்கேலை, ஸ்கொலர்சிப் கட்டவுட் மார்க்ஸின்படி , முதலில் எடுபடாமல் இருந்தவையைத்தான் லிஸ்ட் ஒழுங்கின்படி சேர்க்கிறனாங்கள். இப்ப புதிசா அப்ளிக்கேசன் போட்டு, இன்ரர்வியூ வைச்சு எடுத்தால, முந்தினமுறைப்படி எடுக்கவிருந்த கன பிள்ளையளுக்குப் பாதிப்பும் வரும் எண்டு சொல்லியிருக்கினம். ஆளுநரும் "இந்தப் பிரச்சினையால ஆருக்கும் பாதிப்பு வரக்கூடாது" எண்டிட்டுத்தான் இப்பிடிப் புதிசா எடுபட்ட பிள்ளையளை இப்போதைக்கு எடுக்கவேண்டாம் எண்டு கடிதம் அனுப்பியிருக்கிறார். பகிடி என்னெண்டால், ஆளுநரின்ர கடிதம் வரமுதலே புதிசா சேரவிருந்த 17 பிள்ளையளில மூண்டுபேரை முதலே காதும் காதும் வைச்சமாதிரி உள்ளுக்க எடுத்திட்டினமாம். என்னெண்டு அவையை முதலே எடுத்தவை எண்டதும் ஆருக்கும் இதுவரைக்கும் விளங்காத மர்மம்தான். மிச்சமுள்ள 14 பிள்ளையள்தான் பழைய பள்ளிக்கூடமும் போக ஏலாமல், புதுப்பள்ளிக்கூடத்திலையும் சேர ஏலாமல் தத்தளிக்கினம்,

இவ்வளவு காலமும் பின்பற்றின முறையை மாத்தினதுக்குப் பின்னாலையும் ஒரு சூட்சுமம் இருக்காம். பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த சிலர், தங்கட பிள்ளையளை உள்ளுக்க கொண்டுவாறதுக்காகத்தான் பழையமுறையைத் தூக்கி எறிஞ்சுபோட்டு, சுற்றுநிருபத்தின்படி இன்ரர்வியூ வைச்சு எடுக்க அலுவல் பாத்தவை எண்டும் ஒரு கதை அடிபடுகுது. என்னதான் அப்பிடிச் சிலர் தங்கட லாபத்துக்காக, இதுவரை வந்த முறையை விட்டுட்டு புது முறையில பிள்ளையளைச் சேர்க்க வெளிக்கிட்டிருந்தாலும், இப்ப அங்கையுமில்லாமல் இஞ்சையுமில்லாமல் படிக்கப் பள்ளிக்கூடம் போகேலாமல் நடுக்கடலில நிக்கிற 14 பிள்ளையளுக்கும் என்ன தீர்வு?

இதைப்பற்றி உடனேயே ஒரு கூட்டத்தைப் போட்டு, இப்பிடி நடுத்தெருவில நிக்கிற 14 பிள்ளையளுக்கும், ஸ்கொலர்சிப் வெட்டுப்புள்ளிப்படி (பழைய முறையில) அந்தப் பள்ளிக்கூடத்துக்கு எடுபடாமல் பாதிக்கப்பட்டவைக்கும் பொருத்தமா ஒருத்தருக்கும் பாதிப்பு இல்லாமல் தீர்வைக் காணச்சொல்லி ஆளுநர் உத்தரவு போட்டு, கூட்டமெல்லாம் நடந்தது. ஆனால் அந்தக் கூட்டம் நடந்து சிட்டத்தட்ட ஒருகிழமையாகியும் இன்னும் ஒரு முடிவும் வரேலையாம். பத்துநாளுக்கும் மேல பள்ளிக்கூடம் போகேலாமல் நிக்கிற பதினாலு பிள்ளையளும் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் நிக்கினம். படிப்பும் இல்லை, பள்ளிக்கூடமும் இல்லையெண்டு நிக்கிற அந்தப் பிள்ளையளை முதலில பள்ளிக்கூடத்தில சேர்த்துப்போட்டு, பழையமுறைப்படி எடுபடாமல் பாதிக்கப்பட்டவையையும் சேர்த்தால் சுமுகமா பிரச்சினை தீர்ந்திடும். ஆனால் இப்பிடி இன்ரர்வியூவில வந்த பிள்ளையளை எடுக்கக்கூடாது எண்டு சிலர் ஈகோ காட்டுறதாலதான் ஆளுநர் சொல்லியும்கூட ஒரு தீர்வைக் காணாமல் இந்தப் பிரச்சினை அனுமார் வால் மாதிரி இழுபடுகுதாம். இனியும் பார்த்துக்கொண்டிராமல் இந்தப் பிரச்சினைக்கு சட்டுப்புட்டெண்டு தீர்வு காணுவினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வந்துசேரும். வியாபாரத் தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். திடீர்ச்செலவுகள் மனதைச் சஞ்சலப்படுத்தும். முக்கியமான முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை இருந்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நன்மை ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**மகரம்:** எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற் படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும் அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத்தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.



7 (7,16,25) ஆம் எண்களில் பிறந்தவர்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். இவர்களின் உடையிலே எளிமையும், ஆனால் சுத்தமும் இருக்கும். தங்களது கடமையிலேயே மிகவும் கவனமாக இருப்பார்கள். இவர்களது செயல்களில் ஒரு கண்ணியமும், கட்டுப்பாடும் இருக்கும். உலகத்தை உய்விக்க வந்த இயேசு கிறிஸ்து, ஆதிசங்கராச்சாரியார், ரவீந்திரநாத தாகூர் ஆகியோரெல்லாம் இந்த 7ஆம் எண்ணில் பிறந்தவர்களே. இவர்களுக்குச் சித்து விளையாட்டுகள் எல்லாம் எளிதில் கைகூடும்! இவர்கள் உலகப் பயணம் செய்து, தங்களது அனுபவங்களை உலகத்தாருக்கு அழகுடன் எடுத்துரைப்பார்கள். பொருளாதார நிலை 7ஆம் எண் அன்பர்களுக்குத் திருப்திகரமாக இருக்காது. வேதனைகளும், சோதனைகளும் இவர்களைத் தொடர்ந்து வரும். எந்த ஒரு செயல் தொடங்கினாலும் அதை நிறைவேற்றுவதற்காகப் பல தடைகளைச் சந்திக்க வேண்டிவரும். கேது பகவான் கொடுக்க ஆரம்பித்தால் அதை வேறு யாரும்(கிரகங்கள்) அழிக்கவோ, தடுக்கவோ முடியாது என்பது சோதிட உண்மையாகும். எப்படியும் நல்ல வளமான வாழ்க்கையைத் தங்களது வாழ்நாளில் அடைந்து விடுவார்கள். 7 ஆம் எண்ணின் பலம் குறைந்த அன்பர்கள் பலர் உயர் கல்வி அமைந்திருந்தும், திறமைக்கேற்ற ஊதியம் கிடைப்பது மிகுந்த தடைப்படும். பெரும்பாலான 7ஆம் எண்காரர்கள் இதனை நினைத்து வேதனையும், வாழ்க்கையில் விரக்தியும் அடைகின்றனர்.

ஆனால் இந்த அன்பர்கள் சலிக்காமல் மனோ தைரியத்துடன் வாழ்க்கையில் போராடுவார்கள். மற்றவர்களுக்காக விட்டுக்கொடுப்பார்கள். இந்த 7ஆம் எண்காரர்களுக்கு முன்கோபம் அடிக்கடி வரும். இந்தக் குணத்தினாலேயே, இவர்களது நல்ல செயல்களும், குணங்களும் மக்களால் மறக்கப்படுகின்றன. பொதுவாகத் தங்கள் மனதில் உள்ளதை அப்படியே வெளியில் சொல்லிவிட மாட்டார்கள். இவர்கள் ஆத்மபலம் மிகுந்தவர்கள். அடுத்தவர்களின் தூண்டுதலை எதிர்பார்க்கமாட்டார்கள். இவர்கள் நீதிக்கும், தர்மத்திற்கும் போராடுவார்கள், மக்களுக்காக மனம் விரும்பி உழைப்பார்கள். அவர்களின் செய்நன்றியைப் பிரதிபலனாக எதிர்பார்க்க மாட்டார்கள் என்பதே இவர்களின் உயர்ந்த குணமாகும்.

பொதுக் காரியங்களில் ஈடுபட்டு மற்றவர்களுக்கு உதவி செய்வதில் இவர்களுக்கு நிகர் இவர்களே. இவர்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ள நேரம் கிடைப்பது அரிது. கற்பனைச் சக்தி அதிகம் பெற்றவர்கள். ஆதலால் சின்ன விஷயங்களுக்குக் கூட அதிகம் கவலைப்படுவார்கள்.

**குடும்ப வாழ்க்கை:** ஏழாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வு அவ்வளவு திருப்தியளிக்கும் என்று கூறமுடியாது. வாழ்வில் சுக துக்கங்கள் மாறி மாறி வரினும் எதையும் பொருட்படுத்தமாட்டார்கள். அமைதி ஏற்படவேண்டும் என்பதற்காக இவர்கள் செய்யும் முயற்சிகள் ஓரளவுக்குப் பயன் அளிக்கத்தான் செய்யும். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் யோகசாலிகள் என்றே கூறவேண்டும். கோபத்தைக் குறைத்துக்கொண்டால் வாழ்க்கை துணையால் அனுகூலம் உண்டாகும்.

**பொருளாதாரம் :** ஏழாம் எண்ணில் பிறந்தவர்களின் ஆரம்ப கால வாழ்க்கை வசதி குறைந்து காணப்பட்டாலும், இவர்கள் வளர வளர பொருளாதார நிலையும் வளர்ந்துகொண்டே இருக்கும். எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் இவர்களுக்கு கிடைப்பது அரிது. எதிலும் எதிர்நீச்சல் போட்டுதான் முன்னேறமுடியும். இவர்களுக்கு கடன் வாங்குவதென்பது பிடிக்காத விஷயம். கடன் வாங்கக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் அவற்றை அடைக்கக்கூடிய ஆற்றலும் கொண்டவர்கள். பொருளாதார நிலையில் சங்கடங்களை சந்திக்க நேர்ந்தாலும் இது விதியின் பயன் எனக் கருதாமல் முன்னேற்றத்திற்கான வழிகளைக் கண்டுபிடித்து மேன்மையடைவர்.

**தொழில் :** ஏழாம் எண்ணில் பிறந்தவர்கள் பல துறைகளில் பிரசித்தி அடைவார்கள். 7ஆம் எண்ணிற்கு ஞானக்காரகன் கேது அதிபதி என்பதால், பல புதிய சிந்தனைகளால் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்வார்கள். திரைப்படத் துறைகளிலும் முன்னேற்றம் பெறுவார்கள். தன்னம்பிக்கையும் துணிச்சலும் பெற்றவர்களாக இருந்தாலும், ஒருவித அச்சம் மனதில் நிறைந்திருக்கும். பல்வேறு விதமான வாய்ப்புகள் வாழ்வில் முன்னேறுவதற்குக் கிடைத்தாலும், தான்பிடித்த முயலுக்கு மூன்றே கால் என பிடிவாத குணத்துடன் தன் வழியிலே செல்வார்கள். இதனால் வாழ்வில் பல சமயங்களில் சங்கடமான சூழ்நிலைகளையே சந்திக்க நேரிடும்.

**அதிர்ஷ்ட தேதி - 7,16,25, அதிர்ஷ்ட நிறம் - வெள்ளை, காவி, அதிர்ஷ்ட திசை - வடமேற்கு, அதிர்ஷ்ட கிழமை- திங்கள் , அதிர்ஷ்ட கல் -வைடூரியம், அதிர்ஷ்ட தெய்வம் - கணபதி**

# இணுவில் ஆஞ்சநேயர் மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.28

இணுவில் - மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7.35 மணிமுதல் 9.18 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (ச)

# அஸ்வெசும கொடுப்பனவு

கொழும்பு, ஓக.28

ஓகஸ்ட் மாதத்துக்கான அஸ்வெசும நன்மைகளைப் பெறும் குடும்பங்களின் முதியோருக்கான கொடுப்பனவு நேற்றுமுதல் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. அதன்படி, 5 இலட்சத்து 99ஆயிரத்து730 பயனாளிகளுக்கான கொடுப்பனவு வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

ஒரு சிறந்த மொழியானது பெரும்பாலும் எளிய வார்த்தைகளாலேயே உருவாக்கப்படுகின்றது.

- ஜோர்ஜ் எலியட்

# அரசியலமைப்பின் வெற்றி கைதுகளில் மட்டும் அல்ல

'இனப்பிரச்சினைக்கு மாகாணசபை முறைமை ஒரு போதும் தீர்வாக அமையப்போவதில்லை. இந்த விடயத்தில் எமது கடந்தகால நிலைப்பாட்டில் மாற்றமில்லை. எனினும், அரசியலமைப்பில் மாகாணசபை முறைமை உள்ள காரணத்தால் அந்தத் தேர்தலை நடத்தியே தீருவோம்' என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் வெளிவிவகார அமைச்சரான விஜித ஹேரத். அரசியலமைப்பின் அடிப்படையிலேயே நாடு ஆளப்படுகின்றது என்பதில் எந்தவொரு மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை என்றும் அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். இலங்கையில் மாகாணசபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டபோது, அதை எந்தவொரு சமரசமும் இல்லாமல் தீர்க்கமாக எதிர்த்த கட்சிதான் ஜே.வி.பி. ஆதலால், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மாகாணசபைத் தேர்தலுக்கு வாய்ப்பில்லை என்றும் கருதப்படும் நிலையில், மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்றும் - தேர்தலை நடத்துவதில் அரசிடம் உள்ள உறுதிப்பாட்டையும் வெளிவிவகார அமைச்சர் வெளிப்படுத்திய விதம் பாராட்டுக்குரியது.

மாகாணசபை முறைமை தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாது என்பதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்பதும் தமிழர்களுக்கும் தெரியும். எனினும், ஒரு திட்டத்தின் வெற்றியும் தோல்வியும் அந்தத்திட்டத்தை முற்றாகநடைமுறைப்படுத்தும் போதே வெளிப்படும். மாகாணசபை முறைமை இலங்கையில் இதுவரை முற்றாக நடைமுறைக்கு வரவில்லை என்பதே உண்மை. மாகாணசபை முறைமையின் பிரதான அம்சங்களான காணி, பொலிஸ் அதிகாரம் மத்திய அரசாங்கங்களால் பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பில் அந்த அதிகாரங்கள் மாகாணங்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளபோதிலும், இத்தனை ஆண்டுகளாக அந்த அதிகாரங்களை மாகாணங்கள் அனுபவித்ததாக வரலாறு இல்லை. எனவே, முற்றாக நடைமுறைக்கு வராத திட்டத்தின் வெற்றியையும் தோல்வியையும் தேசிய மக்கள்சக்தியினர் கணிப்பதும் - கருத்துத் தெரிவிப்பதும் வேடிக்கையானது.

அரசியலமைப்பின் அடிப்படையில் நாடு ஆளப்பட வேண்டும்என்பதுதான்தமிழர்களின் பெருவிருப்பமும் கூட. அதே அரசியலமைப்பில் மாகாணசபைகளுக்கு காணிகள் மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. எனவே, அந்த அதிகாரங்களை ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் வழங்குவதற்குத் தயாராக உள்ளனரா ? என்ற தெளிவுபடுத்தலையும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் முன்வைக்கவேண்டும். கடந்த அரசாங்கங்களைப்போன்று காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்படாமல் மாகாணசபை செயற்படுத்தப்படுமாக இருந்தால், அது மீண்டும் மீண்டும் விமர்சனங்களையே எதிர்கொள்ளும் - தோல்வியிலேயே முடியும். எனவே, அத்துடன், அதிகாரங்களைப் பகிரத் தயாராக இல்லாமல்நடத்தப்படும் தேர்தலும் வெறும்கண்துடைப்பு நடவடிக்கையாகவே அமையும்.எனவே, தேசிய மக்கள் சக்தியினர் உண்மையில் அரசியலமைப்பின் அடிப்படையில்தான் நாட்டை ஆள்கின்றனர் என்றால், மாகாணசபைகளுக்கான அதிகாரங்களின் மட்டில் தங்களின் நிலைப்பாட்டைத் தீர்க்கமாக வெளிப்படுத்தவேண்டும். அரசியலமைப்பின்படி அமைந்த ஆட்சியென்பது 'பாரபட்சமற்ற கைதுநடவடிக்கைகள்' என்று பொருள்படாது. அது பலவற்றை உள்ளடக்கியது என்பதை அவர்கள் உணரவேண்டும்.




# 4 கூறுகளாகின்றது இலங்கை மின்சாரசபை

கொழும்பு, ஓக.28

**இலங்கை மின்சாரசபை நான்கு தனித்தனி அரச நிறுவனங்களாக மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மின்சார (திருத்த) சட்டமூலத்தின் கீழ் இந்த மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்பட்டு, தேசிய அமைப்பு நடத்துநர், தேசிய மின் பகிர்வு வலையமைப்பு சேவை வழங்குநர், இலங்கை மின்சார விநியோகம் மற்றும் இலங்கை மின்சார உற்பத்தி என நான்கு தனித்தனி அரச நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த மறுசீரமைப்பிற்குப் பிறகு, தற்போதைய இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு, அவர்கள் விரும்பும் நிறுவனத்துக்கு மாறுவதற்கு 2 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. விருப்பமில்லாதவர்களுக்கு ஓய்வூதிய இழப்பீட்டுத் திட்டம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# காற்றின் வேகம் அதிகரிப்பு

கொழும்பு, ஓக.28

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 55 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இவ்வருடத்தில் ஏற்றுமதி வருமானம் 10 பில்லியன் டொலர்

கொழும்பு, ஓக.28

இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 10 பில்லியன் அமெரிக்க டொலரை நெருங்கியுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 7.79% அதிகரிப்பாகும்.

இந்த ஆண்டின் ஜூலை மாதத்தில் மட்டும், பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி வருமானம் 1641.11 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

ஒரு மாதத்தில் இலங்கை ஈட்டிய மிக உயர்ந்த ஏற்றுமதி வருமானம் இதுவேயாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# பதிவாளர் நாயகமாக முதன்முறை பெண்

கொழும்பு, ஓக.28

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் சசிதேவி ஜலதீபன் கடந்த திங்கட்கிழமை பதிவாளர் நாயகத்திணைக்களத்தில் புதிய பதிவாளர் நாயகமாக கடமைகளை ஏற்றுக்கொண்டார். 160 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக்கொண்ட பதிவாளர் நாயகத்திணைக்களத்தின் முதற்பெண் பதிவாளர் நாயகமாக திருமதி சசிதேவி ஜலதீபன் வரலாற்றில் இணைந்துள்ளார். (ச-இ)



நாளை
வெள்ளிக்கிழமை - ஆவணி 13
29.08.2025
சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம் : 10.35 - 12.05

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணத்தை தரமுயர்த்தும்

## சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.28**
**எங்கள் மண்ணின் துடுப்பாட்ட வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான வாய்ப்புகள் கிடைக்கவேண்டும். அதற்காக சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணத்துக்கு அவசியம். அவ்வாறானதொரு மைதானம் உருவாக்கப்பட்டால்தான் எமது மாவட்ட வீரர்களின் திறமைகள் சர்வதேச தரத்துக்குச் செல்லும்.**

இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் உபசெயலாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன்தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
எந்த அபிவிருத்தி வந்தாலும் அதை எதிர்க்கவேண்டும் என்ற கலாசாரம் எமது மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. இது அபிவிருத்திகளும் பொருளாதார ஈட்டல்களும் எமது பிரதேசத்திலிருந்து விடுபட்டுப் போவதற்கான சந்தர்ப்பத்தையே உருவாக்கும்.
சர்வதேச மைதானம் அமையப்பெற்று, சர்வதேச போட்டிகள் நடைபெறுமாயின், சர்வதேச வீரர்கள், ரசிகர்கள் எனப் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வருகைதருவார்கள். அதனூடாக எமது சுற்றுலாத்துறை முன்னேற்றம் அடையும். அத்துடன் பிரதேசத்தின் அபிவிருத்தியும் யாழ்.மாவட்டத்தின் பொருளாதார ஈட்டலும் பன்மடங்கு அதிகரிக்கும் - என்றார். (ச-20,27)

# இனப்படுகொலைக்கு நீதி; தாயகத்தில் கையெழுத்துப்போர்





## பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஓக.28
தமிழின அழிப்புக்கு நீதி கோரிய 'நீதியின் ஓலம்' எனும் கையெழுத்துப் போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நகர்ப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது நகர்ப் பகுதி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று கையொப்பம் இட்டு போராட்டத்துக்கு வலுச்சேர்த்தனர். தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதிகோரலை வலியுறுத்தி 'நீதியின் ஓலம்' எனும் கையெழுத்துப் போராட்டம் கடந்த 23ஆம் திகதி செம்மணியில் ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-100)

## முல்லைத்தீவில்

முல்லைத்தீவில், ஓக.28
தமிழின அழிப்புக்கு நீதி கோரிய கையெழுத்துப் போராட்ட ஊர்திப் பவனி முல்லைத்தீவு மாவட்டத்தை நேற்றுமுன்தினம் சென்றடைந்தநிலையில் மாவட்டத்தின் பல்வேறுபட்ட பகுதிகளில் மக்களிடம் கையெழுத்துச் சேகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.
இந்த கையெழுத்துகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.
தமிழின அழிப்புக்கு நீதிகோரிய இந்த வாகனப் பவனி, தாயகத்தின் பல்வேறுபட்ட பகுதிகளுக்குச்சென்று கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது. (ச-19)



# சுமந்திரனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஓக.28
தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலர் சுமந்திரனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் தெரிவுகளின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக சபை உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம் செயற்பட்டார் எனக் கூறி அவரை கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் இடைநிறுத்தினார். அதனையடுத்துக் குறித்த பிரதேசசபை உறுப்பினர் சுமந்திரன் தன்னை எந்த அடிப்படையுமற்று மத்திய குழுவின் தீர்மானம் எதுவுமின்றிக் கட்சியிலிருந்து தன்னிச்சையாக நீக்கினார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66,27)

# வட்டுக்கோட்டை துணவி சிவனுக்கு மஹா கும்பாபிஷேகம் நாளை

யாழ்ப்பாணம், ஓக.28
வட்டுக்கோட்டை துணவி பிரகேஸ்வரன் (சிவன்) ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.20 மணி முதல் மு.ப.10.30 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. நேற்று புதன்கிழமை கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகின. இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நடைபெறும். (ச-41-66)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.28
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு 108 சங்காபிஷேகமும், மதியம் 12மணிக்கு அன்னதானமும், இரவு 7மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், இரவு 7.30மணிக்கு உள்வீதி உற்சவமும் இடம்பெறும்.
8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11மணிக்கு முருகப்பெருமானுக்கு உருத்திரா அபிஷேகமும், 10ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்குத் தீர்த்த உற்சவமும், மதியம் 12மணிக்கு அன்னதானமும், 10ஆம் திகதி இரவு 9மணிக்கு சண்டேஸ்வரர் உற்சவமும், 11ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு வைரவர் மடையும் இடம்பெறும். (ச-41)

# காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக மன்னாரில் தொடரும் போராட்டம்



மன்னார், ஓக.28
மன்னார் மாவட்டத்தில் காற்றாலை செயற்றிட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் 24ஆவது நாளாக நேற்று இடம்பெற்றது.
குறித்த போராட்டத்தில் அருட்தந்தை சக்திவேல் உள்ளடங்கலாக தென்பகுதியில் இருந்து மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள்,அருட்சகோதரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.
அன்றையதினம் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிலையில், போராட்டக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் மாவட்டச் செயலர் உள்ளடங்கலாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## வைத்திலிங்கம் பாஸ்கரன்
## (Ship Caption)

சுதுமலை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாஸ்கரன் அவர்கள் நேற்று (27.08.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு- நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், தனேஸ்வரி அம்மா (ஓய்வு பெற்ற மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்-வலி கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் விஷேட ஆணையாளர்)அவர்களின் அன்புக் கணவரும், பானுஷா, சசிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகரனின் அன்பு மாமனாரும், ஆதவன், பிரணவி ஆகியோரின் பேரனும், இரட்ணகோபால் தெய்வநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற வர்களான சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்), செல்வரட்ணம் பராசக்தி, பாலகிருஷ்ணன், விமலாதேவி குமாரகுலசிங்கம், பாலேந்திரன் (ஓய்வு பெற்ற அதிபர்) மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மயில்வாகனம் உதயமணி, விக்கினேஸ்வரராஜா (ஓய்வு பெற்ற அதிபர்), ஸ்ரீசெகரட்சகமூர்த்தி சேதுபதியம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் நாளை (29.08.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் தீர்த்தங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திருக்கேதீஸ்வரம்,
பாரதி வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

**தகவல்:**
**மனைவி**
**ஏரம்பு குடும்பம்**
**077 757 0079**

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னபூரணம் முருகையா
## (சின்னக்கிளி)

யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வதிவிடமாகவும், தற்போது கனடா Pickering ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் முருகையா அவர்கள் கடந்த 25.08.2025 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் முருகையா அவர்களின் ஆருயிர் மனைவியும், சிவகுமாரன் (வானம்பாடி சிவா), ஹேமலதா, ராஜ்குமார், பிரேமலதா, நரேஸ்குமார், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கணேச பிள்ளை, பரிபூரணம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ராமு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஷ்வரி, சோதிலிங்கம், இராஜேஸ்வரி, கதிரவேலு, சிவக்கொழுந்து, தெய்வானை, வள்ளியம்மை ஆகியோரின் மைத்துனியும், சாந்தினி, உமாபதி, காயத்திரி, பாலேந்திரன், தர்ஷினி, குமரதாசன் ஆகியோரின் மாமியாரும், ஆருரன், ஆதிரை, சங்கீத், சங்கவி, சஞ்சீவ், இரஜீத், கிஷானா, ஹரிஷா, அபினா, அபிஷன், அனிக்கா, அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.08.2025) காலை 8.00 - 9.30 மணி வரை Ajax Crematorium & Visitation Centre, 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, முற்பகல் 11.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

சிவா - மகன் - +16472849132
உமா - மருமகன் - +16478692441

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம் ஓக.28

யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளைமறு தினமும் புத்தகக்கண்காட்சிகள் இடம்பெற வுள்ளன.

மணிமேகலைப் பிரசுரத்தின் ஏற்பாட்டில் இந்தப் புத்தகக் கண்காட்சிகள் இடம்பெற வுள்ளன. அதன்படி இன்று யாழ்ப்பாணம் பல் கலைக்கழகக் கேட்போர் கூடத்திலும் நாளைமறுதினம் யாழ்ப்பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபத்திலும் புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (ச-40)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான நகைக்கடைக்கு கணக்கு எழுதுநரும், நகைக் கடை உதவியாளரும் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.

077 357 7212, 077 717 9308

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் Stanly Road ல் அமைந்துள்ள Hard ware ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 021 222 8307
077 673 1018

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கிவரும் Ice - Cream கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

077 378 8746


## நீங்கா நினைவில்

2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு

மலர்வு 19.01.1965 | உதிர்வு 28.08.2023



அமரர் செல்லையா சுரேஸ்குமார்
இறையருள் நாள் : 28.08.2025

மலர்வு 05.04.1937 | உதிர்வு 01.09.2022



அமரர் துரைராஜா தவமணி
திதி : 28.08.2025

இன்று 28.08.2025 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி வேலனைக் கைதொழுது உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர் 077 108 4879 196/A நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

# ஆதனப்பெயர்மாற்றம்

23.07.2025ம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆதனப்பெயர் மாற்ற பத்திரிகைப்பிரசுரத்தில் 2 வது பந்தியில் 2230 ம் இலக்க பிரகடன உறுதி 30.04.2024 என கைபிழைபாடாக தவறுதலாக தட்டச்சு இடப்பட்டு பத்திரிகைப் பிரசுரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 10 வருட காலம் நிறைவு பெற்ற பிரகடன உறுதியான 2230ம் இலக்க உறுதி 30.04.2004 என திருத்தப்பட்ட பத்திரிகைப்பிரசுரம் கீழ்வருமாறு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**ஆதனப்பெயர்மாற்றம்**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 11 காரைதீவு வீதி, 281 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. செபஸ்ரியாம்பிள்ளை பிரான்சிஸ்கம்மா 30.04.2004 திகதியிட்டு பிரசித்த ரி.எம்.அன்ரனிப் பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2230ம் இலக்க பிரகடன உறுதியில், குறித்த எனது ஆதனத்தின் உறுதிகள் அண்மைக்கால இடம்பெயர்வின் போது தவறிவிட்டன அவற்றை இதுவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை எனவும், எனது நீண்டகால ஆட்சியுமானதும், என உறுதிப்படுத்தி பிரகடனப்படுத்துகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஆதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பிரான்சிஸ்கம்மாவும் 30.12.2012 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1612ம் இலக்க நிபந்தனை அறுதி மூலம் கிறிஸ்ரியன் சிலுவைதாசன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கிறிஸ்ரியன் சிலுவைதாசனும் பெண் சிசிலியம்மாவும் 14.12.2013ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1937ம் இலக்க அறுதி உறுதி மூலம் யோஜ் மரியதாஸ்சிற்கும் பெண் பிரான்சிஸ்கம்மா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

ஆதன பெயர் -சுரிவெளிக்காடு, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை. J/85 ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நிலப்பரப்பு 03 குளி 16.12 (நிலப்பரப்பு மூன்று குளி பதினாறு தசம் ஒன்று இரண்டு) தற்போது இவ்வாதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மாவும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மாவும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

முதல்வர்,
யாழ் மாநகரசபை.

# ‘நூறு மலர்கள் மலரட்டும்’ புத்தக அரங்க விழா

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ‘நூறு மலர்கள் மலரட்டும்’ எனும் தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 27ஆவது நிகழ்வு எதிர்வரும் 29, 30, 31 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ‘ஈழத்து நூல்களை அறிவோம்’ என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச்செயலாளரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான சோ. தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரபல இளம் அரங்கச் செயற்பாட்டாளர் இராசையா லோகாநந்தனின் ‘மலை தாண்டி கடல் தாண்டி’ புத்தகம் பற்றி கவிஞர் வி.கே.றொபின், கட்டட வடிவமைப்பாளரும் ஆய்வாளருமான இ.மயூரநாதனின் ‘யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு’ நூல் தொடர்பாக வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர் எஸ்.யசோதரன், பிரபல எழுத்தாளரும் கவிஞருமான வி.ரி.இளங்கோவனின் ‘இளங்கோவன் படைப்புகள்’ புத்தகம் பற்றி எழுத்தாளரும், ஆசிரியருமான கலாநிதி சு.குணேஸ்வரன் ஆகியோர் அறிமுக உரைகளை ஆற்றவுள்ளவுள்ளனர்.

தொடர்ந்து, விசேட கலைநிகழ்வுகளாக கூத்தாட்டு அவைக்களத்தின் தயாரிப்பில், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் வி.விஜயரூபனின் நெறியாள்கையில் ‘இடுக்கண் வருங்கால்’ மற்றும் வி.விஜயரூபனின் எழுத்துரு, நெறியாள்கையில் ‘பட்டறிவு’ ஆகிய சிறுவர் நாடகங்கள் இடம்பெறவுள்ளன.

விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. முற்றிலும் இலவசமாக இடம்பெறும் இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

(ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 98 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.28

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த முதலாவது தமிழரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 98ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள் யாழ்.பண்ணாகத்திலும், மூளாயிலும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் முன்றலில் அமைந்துள்ள உருவச் சிலையடியிலும் மூளாயில் அமைந்துள்ள அமிர்தலிங்கத்தின் நினைவு இல்ல முன்றலில் அமைந்துள்ள அமிர்தலிங்கத்தின் உருவச் சிலையடியிலும் பிறந்தநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-25,66)



கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயம் க.பொ.த. உயர் தர கணித,விஞ்ஞானப் பிரிவுகளின் ஆரம்ப விழா பாடசாலையின் முதல்வர் பெ. பாலகிருஷ்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது. (ச-113)



## நீர்வேலி அத்தியார் மாணவர்களுக்கு சுற்றாடல் முன்னோடி விருது

யாழ்ப்பாணம், ஓக.28

சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விருதை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இராஜமோகன் மீனலோஜினி, செல்வராசா சாருஜன், ஜெயரட்ணம் திருத்தகி, பொறுப்பாசிரியை திருமதி இராஜராஜேஸ்வரி சிவகுமாரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மாணவர்களுக்கு விருதை வழங்கிவைத்தார். (ச-41-17)


## வடமாகாண புதிய கடற்படைத் தளபதி யாழ்.மாவட்டச் செயலருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஓக.28

வடக்கு மாகாணக் கடற்படைத் தளபதியாகப் புதிதாகப் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே, யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கே. சிவகரன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) பா.ஜெயகரன், மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-66)



## உயரம் பாய்தலில்
# உடுவில் மகளிர் கல்லூரி மாணவி முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக.28

வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி குகராஜ் சங்கவி 16 வயதுப்பிரிவு உயரம் பாய்தலில் 1.46 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைத் தனதாக்கியுள்ளார். குறித்த மாணவி இதற்கு முன்னரும் பல தடவைகள் உயரம் பாய்தல் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-41-27)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி



யாழ்ப்பாணம், ஓக.28

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. உரிமக் கட்டணமாக 100ரூபா அறவிடப்படும்.

இன்று வியாழக்கிழமை மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில், மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை பழைய பூங்கா சிறுவர் நீதிமன்றப்பகுதி, பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை திருநகர் மாணவர் படிப்பகம்.

நாளை வெள்ளிக்கிழமை மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை இராஜசிங்கம் வீதி மாதா சிலையடிப் பகுதி, மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை சென்.பற்றிக்ஸ் வீதி சேமக்காலை அருகில், பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை சென்.பற்றிக்ஸ் வீதி கதிர்றல் வீதி சந்தி.

எதிர்வரும் 1ஆம் திகதி மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை இராஜேந்திரா வீதி, மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை டேவிற் வீதி கடற்கரை வீதிச் சந்தியருகில், பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை மவுண்காமல் வீதி பாங்சால் வீதி.

2ஆம் திகதி மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை சென்.றொக்ஸ் சனசமூக நிலையம், மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை றெக்கிள மேசன் சனசமூக நிலையம், பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை புதிய கடற்கரை தண்ணீர்த் தாங்கி.

3ஆம் திகதி மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை தண்ணீர்த் தாங்கி 4ஆம் 5ஆம் குறுக் குத்தெரு, மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக, பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை 2ஆம் குறுக்குத்தெரு குருநகர்.

4ஆம் திகதி மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை ஜஸ்பிளான்ட் வீதி, மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை குருநகர் சனசமூக நிலையம் முன்பாக, பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை கடற்கரை வீதி 1ஆம் குறுக்குத்தெரு சந்தி.

8ஆம் திகதி மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை பாங்சால் வீதி 4ஆம் குறுக்குத்தெரு சந்தி, மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை, பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை புதுமை மாதா ஆலயம் அருகாமை.

9ஆம் திகதி மு.ப.9மணி தொடக்கம் 11மணி வரை ஓடக்கரை வீதி, மு.ப.11மணி தொடக்கம் 12மணி வரை யூபிவி மகப்பேற்று நிலையம் முன்பாக, மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணி வரை குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக, மு.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை செபஸ்ரியார் கோவில் அருகாமை ஆகிய இடங்களில் தடுப்பூசிகள் வழங்கப்படும். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இரவில் ஒளிரும் பருத்தித்துறை!

யாழ்ப்பாணம், ஓக.28

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வி.டக்ளஸ் போலின் முயற்சியால் புதிய வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டு பருத்தித்துறை நகருக்கு இரவு வேளையில் ஒளியூட்டப்பட்டுள்ளது.

வடமராட்சியின் கேந்திர முக்கியத்துவம் மிக்க நகராக விளங்கும் பருத்தித்துறை நகரப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வீதி மின்விளக்குகள் பழுதடைந்து நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாது காணப்பட்டது. இதனால் இரவு வேளைகளில் வர்த்தகர்கள், சாரதிகள் உள்ளிட்டோர் பயணம் செய்வதில் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துவந்தனர்.

இதுதொடர்பில் புதிய நகரசபைத் தலைவர் டக்ளஸ் போலின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் 'பருத்தித்துறை நகருக்கு ஒளியூட்டுவோம்' எனும் செயற்பாட்டின் கீழ் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு நூறு புதிய வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-100)

# தன் கடமையை சட்டம் செய்யும்

*அமைச்சர் சமந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.28

போராட்டங்கள்மூலம் சட்டம் நடைமுறை யாவதைத் தடுக்க முடியாது. சட்டம் தனது கடமையைச் செய்வது அரசியல் பழிவாங்கல் அல்ல என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டம் நடத்தும் உரிமை உள்ளது. அந்த ஜனநாயக உரிமையை மதிக்கின்றோம். அதேபோல நாட்டில் சட்டமும் தனக்குரிய கடமையைச் செய்யும். போராட்டம் மூலம் அதனைத் தடுக்க முடியாது. எவரையும் பழிவாங்கும் தேவைப்பாடு அரசாங்கத்துக்குக் கிடையாது. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கைகள் இடம்பெறும்- என்றார். (ச-44)



பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் வருகைதந்து மாவட்டச் செயலகத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டுக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (ச-113)

# விபத்தில் மூவர் பலி

குருணாகல் மாவட்டம் குளியாப்பிட்டியிலுள்ள பலப்பிட்டிப் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் 13 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்குநேர் மோதியதால் இந்த விபத்து நேர்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.28

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.10 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

மஹா கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்கக் கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானதுடன் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவமும் இடம்பெறுமென ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இஸ்ரேல் தாக்குதல்

# ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 20 பேர் காஸாவில் பலி!

**காஸா, ஓக.28**

**தெற்கு காஸாவின் கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனையின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 5 பத்திரிகையாளர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.**

நான்காவது மாடியின்மீது இஸ்ரேல் இரண்டு முறை வான்தாக்குதல் நடத்தியுள்ளது. மீட்புக்குழு மீட்புப் பணிக்காகவந்த நிலையில், மற்றொருமுறை வான்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த மருத்துவ உதவியாளர்கள் மற்றும் சம்பவத்தை படம்பிடித்து கொண்டிருந்த பத்திரிகையாளர்கள் பலியாகினர். அசோசியேட்டட் பிரஸ், ரொய்ட்டர்ஸ், அல் ஜஸீரா உள்ளிட்ட பத்திரிகைகளைச் சேர்ந்த 5 பத்திரிகையாளர்கள் இதில் பலியாகினர். இந்தத் தாக்குதலுக்கு சர்வதேசம் கடும் கண்டனம் வெளி யிட்டுள்ளது.

இந்தநிலையில் இது தவறுதலாக நடந்த ஒரு 'துயரமான விபத்து' என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு வருத்தம் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனை மீதான தாக்குதலை உறுதிப்படுத்திய இஸ்ரேல் இராணுவம் இதுகுறித்து உள்விசாரணை நடத்தப்படும் என அறிவித்துள்ளது. (ச-இ)

## மனிதர்களின் சதையை உண்ணும் ஒட்டுண்ணிகள்

### அமெரிக்காவில் கண்டறிவு



வொஷிங்டன், ஓக.28

அமெரிக்காவில் மனிதர்களின் சதையை உண்ணும் 'ஸ்க்ரூவோர்ம்' என்ற ஒட்டுண்ணி ஒருவருக்குத் தொற்றியுள்ளதை அமெரிக்கா சுகாதாரத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் மத்திய நோய்க்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், நியூயோர்க்கில் உள்ள ஒருவரிடம், இந்த ஒட்டுண்ணியைக் கண்டறிந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர், எல் சால்வடாரில் இருந்து திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த, 1960களில் உள்நாட்டில் ஒழிக்கப்பட்ட இந்த ஒட்டுண்ணி, தற்போது மத்திய அமெரிக்காவிலிருந்து வடக்கே நகர்ந்து வருவது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ச-இ)

## அம்மாவாகும் ரோபோக்கள்



பீஜிங், ஓக.28

வாடகைத் தாய்க்குப் பதிலாக, சுற்ப காலங்களில்ரோபோகளை உருவாக்கி மனித குழந்தைகளைப் பெற்றெடுக்கும் முயற்சியில் சீன விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். குறித்த ரோபோக்களில் செயற்கை கருப்பையைப் பொருத்தி, ஒரு குழாய் மூலம் ஊட்டச்சத்துகள் செலுத்தப்படும்.

குறித்த திட்டத்தை எதிர்வரும் 2026ஆம் ஆண்டுக்குள் அறிமுகப்படுத்த சீனா திட்டமிட்டுள்ளதாக சீன விஞ்ஞானி ஜாங் கியூ இபெங் தெரிவித்துள்ளார். (ச-இ)

## இந்தியா – சீனா இடையே மீண்டும் எல்லை வர்த்தகம்

பீஜிங், ஓக.28

இந்தியா - சீனா இடையே மீண்டும் விமானப் போக்குவரத்துச் சேவை மற்றும் எல்லை வர்த்தகத்தை ஆரம்பிக்க இரு நாடுகளும் அனுமதியளித்துள்ளன.

கொரோனா காரணமாக நிறுத்தப்பட்டிருந்த இந்தியா - சீனா இடையேயான எல்லை தாண்டிய வர்த்தகம், இமாச்சலப் பிரதேசத்தின் ஷிப்கி லா கணவாய் வழியாக மீண்டும் தொடங்க சீனா கொள்கை அளவில் அனுமதியளித்துள்ளது.

வர்த்தகத்தோடு, கைலாஷ் மான்சரோவர் யாத்திரையும் மீண்டும் ஆரம்பமாகவேண்டும் என்ற கோரிக்கைக்கும் சீனா சாதகமாகப் பதிலளித்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. (ச-இ)



# காஸாவில் கொடும் பஞ்சம் பட்டினியில் 5 இலட்சம் மக்கள்

காஸா, ஓக.28

காஸாவில் மனிதனால் உருவாக்கப்பட்ட கொடும் பஞ்சம் நிலவுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு நிலை வகைப்பாடு (IPC) அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

அதன் அறிக்கையின்படி, காஸாவில் அரை மில்லியனுக்கும் (5 இலட்சத்துக்கும்) அதிகமான மக்கள் கடுமையான பசியை எதிர்கொள்கின்றனர். காஸா நகரம் உட்பட பாலஸ்தீனத்தின் சுமார் 20 சதவீதப் பகுதியில் பஞ்ச நிலைமை தலைவிரித்துள்ளது.


மத்திய கிழக்கு வரலாற்றில் ஒரு பகுதியில் பஞ்சம் அறிவிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். பசியைப் போர் ஆயுதமாகப் பயன்படுத்துவது ஒரு போர்க்குற்றம் என்று ஐ.நா மனித உரிமைகள் அதிகாரி வோல்கர் ட்ரக் தெரிவித்துள்ளார்.

உடனடிப் போர்நிறுத்தம் செயற்படுத்தப்பட்டு, மனிதாபிமான உதவி கிடைக்காவிட்டால், கான் யூனிஸ் மற்றும் டெய்ர் அல்பாலா போன்ற தெற்குப் பகுதிகளுக்குப் பஞ்சம் பரவக்கூடும்.

பல்லாயிரக்கணக்கானோர் பட்டினியின் விளிம்பில் உள்ளனர். உதவி கிடைப்பதில் ஒரு நாள் தாமதம்கூட பட்டினி மரணங்களை அதிகரிக்கச் செய்கிறது.

தடுக்கக்கூடிய இறப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்று அறிக்கை எச்சரிக்கிறது.

காஸாவில் கடந்த ஓரிரு மாதங்களில் பட்டினியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை [illegible]ஐ நெருங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# இந்தியப் பொருள்களுக்கு அமெரிக்கா 50 வீத வரி!

வொஷிங்டன், ஓக.28

ஏற்கனவே உள்ள 25 வீத வரியுடன் சேர்த்து இந்தியப் பொருள்களுக்கு விதிக்கப்படும் மொத்த வரி 50 வீதமாக நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கி உக்ரைன் போரை ஊக்குவிப்பதாக குற்றஞ்சாட்டி கடந்த 6ஆம் திகதி இந்தியப் பொருள்கள்மீது அபராதமாக 25 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்திருந்தார்.

இந்நிலையில் ட்ரம்ப் ஏற்கெனவே அறிவித்தபடி, இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு கூடுதலாக 25 வீத வரி விதிப்பதாக அமெரிக்கா அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய ஏற்கனவே உள்ள 25 வீத வரியுடன் சேர்த்து இந்தியப் பொருள்களுக்கு விதிக்கப்படும் மொத்த வரி 50வீதமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை இரத்தினம், நகைகள், ஜவுளி, ஆடைகள், இறால் போன்ற இந்தியாவின் ஏற்றுமதித் துறைகளைக் கடுமையாகப் பாதிக்கும் என ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்மன்பிலவுக்கு...

கடந்த 5ஆம் திகதி நடத்தப்பட்ட ஊடக சந்திப்பொன்றில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில சமூகங்களுக்கு இடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்தும் வகையில் கருத்துகள் வெளியிட்டமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் கீழ் இந்த விசாரணை நடத்தப்படும் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுரவிடம் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## நீதிக்கான...

காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நாளைமறுதினம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. அந்தப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு தமிழர் தாயக பகுதியிலே போர் ஆரம்பிக்கப்பட்டு தற்காலம் வரையிலும் பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புகளுக்கு தமிழர் தாயகம் முகங்கொடுத்து வருகின்றது. இந்தக் காலப்பகுதியிலே எமது பல உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக இன்றளவும் அவர்களது உறவினர்கள் அவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதில் நிறையத் தாய்மார்கள் இறந்தும் கூட இருக்கின்றனர். இன்றும் நம் மக்கள் வாழ்கின்ற நிலப்பகுதியில் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகள், சிங்கள பௌத்தமயமாக்கல், தமிழர்களுடைய பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்படாமை என அதிகார ரீதியாக தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றமை எங்கள் மக்களுக்கான நீதி இந்த நாட்டில் தொடர் சவாலுக்கு உட்படுத்தப்படுக்கின்றமையையே குறிக்கின்றது.

தமிழ் மக்கள் தங்கள் தாயக பகுதியில் அரசியல் கலாசார பொருளாதார ரீதியாக ஒடுக்கப்படுவதையும் எமக்கான நீதி மறுக்கப்படுவதையும் நாம் உரத்துச் சொல்வதே போராட்டங்களின் தார்மீக நோக்கமாகும். இன்றளவும் தமிழர் நிலங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளேயே இருக்கின்றன. வலிகாமம் கிழக்கு காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு விடுவிக்கப்படாத நிலையிலேயேஎங்கள்மக்கள்தொடர்ந்து போராடிவருகின்றனர். யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்தும் இன்றளவும் நீதிக்கான தவிப்புகள் தணியப்படவில்லை. நாளைமறுதினம் சனிக்கிழமை வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினர் தங்கள் பிள்ளைகளைத் தேடி சர்வதேச நீதி விசாரணை கோரிப் போராட முனைந்துள்ளனர். எங்கள் நிலத்தினுடைய அரசியலைப் புரிந்து கொண்டு எங்கள் மக்களுக்காக காணாமல் ஆக்கப்பட்ட எங்களுடைய உறவுகளுக்காக போராட்டக் களத்துக்கு அனைவரும் ஒன்றுகூடிவர வேண்டும் - என்றனர். (அ-ச-26-20)

## 204...

பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வேட்பாளர்கள் தங்களது சொத்து அறிக்கைகளைச் சமர்ப்பிக்காததை அடுத்து தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது பொலிஸார் சொத்து மதிப்பு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26)

## நீதிமன்றுக்கு...

துக்கு அருகில் சட்டவிரோதமாகச் செயற்பட்டவர்கள்தொடர்பில்விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வுட்லர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். சட்டவிரோதமாகக் கூட்டத்தை கூட்டிய வர்கள் மற்றும் முறையற்ற விதத்தில் செயற்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி அடுத்த தவணையின்போது, நீதிமன்றத்தில் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் தெளிவான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. குற்றப்புலனாய்வுத்திணைக்களம் எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## இ.போ.சபை...

கிணைந்த நேர அட்டவணையை ஏற்றுக்கொள்வதில் எழும் சில பிரச்சினைகள் தொடர்பாகவே இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## ரணில்...

சர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எந்தவொரு இராஜதந்திரியோ அல்லது இராஜதந்திர அமைப்போ இது பற்றி அவ்வாறு எதையும் (அழுத்தம்) அறிவிக்கவில்லை. தனிநபர்கள் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். அந்த இருவர் தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இருவரில் ஒருவர் இதேபோன்ற குற்றச்சாட்டுக்கு உள்ளவர்.

தூதுவரோ, தூதரகமோ, உயர்ஸ்தானிகரோ இவ்வாறு எவ்வித அறிவிப்பையும் விடுக்கவில்லை. [illegible]

ருக்கும் சமமாகச் செயற்படுகின்றது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது - என்றார். (அ-எ-44)

## கொழும்பு...

சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பான தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிட்டமைக்காகவே அவர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஓர் அரச அதிகாரியாகவும், மருத்துவ நெறிமுறைகளின்படியும் அவர் அவ்வாறு செய்ய முடியாது. ஒரு நோயாளியின் உடல்நிலை தொடர்பாக ஏனைய தரப்பினருக்கு எந்த தகவல்களை வெளியிடக்கூடாது. சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வரும் அனைவரும் நோயாளிகளே. நோயாளி தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டதன் மூலம் பதில் பணிப்பாளர் தனக்குப் பொருத்தமற்ற ஒன்றைச் செய்துள்ளார் என்றும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-எ-இ)

## குறுகிய...

நடைபெற்றது. அதில் பங்கேற்ற அமைச்சர், அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஊழல்வாதிகளுக்கு எதிராக கட்டாயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தேங்காய் திருடினாலும் குற்றம்தான், மாங்காய் திருடினாலும் குற்றம்தான். டயமன்ட் திருடினாலும் குற்றம்தான். அது சிறிய குற்றம், இது பெரிய குற்றம் எனக் குற்றத்தைப் பிரித்துப் பார்ப்பது கூடக் குற்றம்தான்.

கடந்தகாலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டம் தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளது. அதனாலேயே தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக கள்வர்கள் கூட்டுச் சேர்ந்துள்ளனர். இது ஜனநாயகத்துக்கான கூட்டணி அல்ல. மாறாக கள்வர்களைக் காப்பதற்கான கூட்டணியாகும். ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்தவர்கள், ஜனநாயகம் பற்றிக் கதைப்பது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பான செயலாகும். நாட்டில் இன்று நீதிக்கட்டமைப்பு சுயாதீனமாகச் செயற்படுகின்றது. எந்தவித அரசியல் தலையீடுகளும் இல்லை.

சட்டம் தனது கடமையைச் செய்வதற்குரிய வளங்களை நாம் வழங்கி வருகின்றோம். ஜனநாயகம் பற்றி எதிரணிகள் எமக்குப் பாடம் எடுக்கவேண்டியதில்லை. ஜனநாயகம் என்றால் என்னவென்பதை செயலில் காட்டியவர்கள் தான் நாம். கடந்த இரு தேர்தல்களின் போது ஜனநாயகம் எப்படிப் பாதுகாக்கப்பட்டது என்பதை முழு உலகமும் அறியும் - என்றார். (அ-எ-26)

## செம்மணியில்...

முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. செம்மணி - சித்துப்பாத்தி இந்துமயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நேற்று இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கையின் [illegible] மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் புதிதாக 3 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன. அதேநேரம், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 8 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இதுவரையில் செம்மணி மனிதப் புதைகுழியில் 169 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 158 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அகழ்வு நடவடிக்கைகள் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா. ரனித்தா, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் சார்பாக பூரணி மரியநாயகம், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோரும் நேற்றைய அகழ்வு நடவடிக்கைகளின்போது முன்னிலையாகினர். (அ-எ-26)

## செம்மணிப்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் ஜனவரி மாதம் வடக்குக்கு வரவுள்ளார். ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு வருடம் நிறைவானதை முன்னிட்டு வடக்கில் அவர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளார்.

தற்போது உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் கவனிப்பைப் பெற்றிருக்கும் செம்மணிப் புதைகுழியில் தொடர்ந்து அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் நேற்றுவரை 169 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தநிலையிலேயே, வடக்குக்கு வரும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செம்மணிப் புதைகுழியையும் நேரில் சென்று பார்வையிடுவார் என்று நேற்று யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தகவல் வெளியிட்டுள்ளார். (அ-எ-26-20)

## காணி...

இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை, அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் விவசாய நடவடிக்கைக்கான காணிகளை வழங்குவதற்கும், சில பகுதிகளில் குடியமர்வுக்கான காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் வனஜீவராசிகள் மற்றும் வனவளத் திணைக்களம், மகாவலி அதிகாரசபை உள்ளிட்ட பல நிறுவனங்களுடன் கலந்துரையாடி, நிரந்தரக் குடியிருப்பு அமைத்தல், வர்த்தகம் மற்றும் விவசாயம் போன்ற நடவடிக்கைகளுக்கு காணிகளை வழங்கும் நோக்கில் இந்த அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவொன்றை நியமிப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயக்கை சித்திவிநாயகர் கொடியேற்றம் நாளை

பருத்தித்துறை தம்பசிட்டி திருவருள்மிகு மாயக்கை சித்திவிநாயகர் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவம் சுவாதி நட்சத்திரமும், சஷ்டி திதியும், சித்தயோகமும் கூடிய சுபவேளையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை பக்திமுக்தி உற்சவமும், 4ஆம் திகதி வியாழக்கிழமை மாம்பழத் திருவிழாவும், 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருவேட்டை, சப்பறத் திருவிழா என்பனவும் இடம்பெறும். தொடர்ந்து தேர்த் திருவிழாவானது 6ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 7.30மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று காலை 9.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணம் செய்து வீதியுலா இடம்பெறும்.

7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று 9மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 10.15மணிக்கு சுவாமி தீர்த்தமெடுத்தல் இடம்பெறும்.

(ச-41-100)

## ஜூலை மாதத்தில்

# ஆடை ஏற்றுமதி வலுவாக வளர்ச்சி

கொழும்பு, ஓக.28

இலங்கையின் ஆடை ஏற்றுமதித் துறை இந்த ஆண்டின் ஜூலை மாதத்தில் வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில், ஆடை ஏற்றுமதி வருவாய் 9.84 வீதமாக அதிகரித்துள்ளதாக ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில், இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருவாய் 455.16 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது. இது 2024 ஜூலை மாதத்தில் பதிவான 414.38 மில்லியன் டொலரைவிடக் கணிசமான உயர்வாகும்.

ஐரோப்பாவுக்கான (பிரிட்டன் தவிர) ஏற்றுமதிகள் 26.69 வீதம் அதிகரித்துள்ளன. பிரிட்டனுடனான ஆடை ஏற்றுமதிகள் 0.72 வீதம் சிறிய அதிகரிப்பை மட்டுமே பதிவுசெய்துள்ளன.

ஏனைய சந்தைகளுக்கான ஏற்றுமதி மதிப்பு 24.24 வீதம் அதிகரித்துள்ளது. அமெரிக்காவிற்கான ஏற்றுமதி மதிப்பு ஜூலை மாதத்தில் 2.7 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

2025 ஜனவரி முதல் ஜூலை வரையான இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், இலங்கையின் மொத்த ஆடை ஏற்றுமதி வருவாய் 2916.10 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 9.09% அதிகரிப்பாகும்.

இந்த நேர்மறையான வளர்ச்சியைத் தக்கவைக்க, வணிக வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், கொள்கை மாற்றங்களைச் செயற்படுத்துதல் மற்றும் விநியோகச் சங்கிலியில் மதிப்பு சேர்ப்பதில் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் வலியுறுத்தியுள்ளது. (ச-இ)

# மல்வில் கிருஷ்ணன் அலங்கார உற்சவம்

கிளிநொச்சி, ஓக.28

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.


எதிர்வரும் 31ஆம் திகதி வெண்ணெய் திருடுதல் திருவிழாவும் செப்ரெம்பர் முதலாம் திகதி துகில் திருவிழாவும், இரண்டாம் திகதி சர்ப்பத் திருவிழாவும் மூன்றாம் திகதி மகா கம்சன் போர்த் திருவிழாவும் நான்காம் திகதி வேட்டைத் திருவிழாவும், ஐந்தாம் திகதி சப்பறத் திருவிழாவும் ஆறாம் திகதி தேர்த் திருவிழாவும் ஏழாம் திகதி சமுத்திரத் திருவிழாவும் எட்டாம் திகதி மல்வில் தாமரைத் தடாகத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். திருவிழாக் கிரியைகள் பிரம்மஸ்ரீ வித்தியானந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளன. (ச-9)

# மன்னார் மருத்துவமனை தாரைவார்ப்பு; அபிவிருத்திக்குழுவில் தீர்மானமில்லை

மன்னார் பொது மருத்துவமனையை மத்திய அரசின்கீழ் கொண்டுவருவதற்கு மன்னார் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றுவதற்கு முயற்சியெடுக்கப்பட்டது. எனினும் குறித்த முயற்சிக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான து. ரவிகரன் மற்றும் ப. சத்தியலிங்கம் ஆகியோரால் மிகக்கடுமையான எதிர்ப்பு வெளியிட்டதையடுத்து அபிவிருத்திக்குழுவில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சி கைவிடப்பட்டது.

இருப்பினும் ரிசாத் பதியுதீன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்னார் பொது மருத்துவமனையில் வளப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், அந்த வளப் பற்றாக்குறைகளைத் தீர்க்க மாகாண சபை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றச் சாட்டு முன்வைத்ததுடன் குறித்த மருத்துவமனை மத்திய அரசின்கீழ் கொண்டு வரப்படவேண்டுமென்றும் கருத்துகளைத் தெரிவித்தனர். (ச-26,246)


## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 30.07.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த

**அமரர் கதிர்காமத்தம்பி குமாரசுவாமி**

அவர்களின் சபிண்டீகரணக்கிரியைகள் நாளை மறுதினம் (30.08.2025) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு : இவ்வழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.**

பிள்ளையார் கோவில் ஒழுங்கை
தும்பளை, பருத்தித்துறை

(CR/45932) J-1

குடும்பத்தினர்
0762003527

## வேலையாட்கள் தேவை

யாழ் நகர்ப்புறத்தில் இயங்கி வரும் எமது புடைவை நிறுவனத்திற்கு முன் அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 855 4840

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து வழங்கப்பட மாட்டாது. ஏக்கர் 13 இலட்சம்.
தொடர்பு : Whatsapp : 0044 740 537 3526
(CS 59217) E

## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.
அல்லது
- தென்மராட்சி 50,000,
- யாழ்மாவட்டம் 55,000
- வடமராட்சி 58,000

விநியோகிக்கப்படும்.
தொடர்பு:- 076 324 9977

## யாழ் நகரில் iQ WORLD

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (TCT SUPER CENTRE முன்பாக)
ஆசிரியர்: என். எஸ். தீபன்
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
தரம்-4, தரம்-3 மாணவர்களுக்கான
I.Q Classes | Paper Classes
புதிய பிரிவுகள் ஆரம்பம் 31.08.2025
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. 077 666 0749


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org